ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ மஞ்சாடு ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ மஞ்சாடு ‖

## திருக்கோவலூர்

‡மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும்⋆
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம்⋆
எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின்மேல் ஓர்⋆
இளந் தளிரில் கண்வளர்ந்த ஈசன் தன்னை⋆
துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணைத் தென் பால்⋆
தூய நான் மறையாளர் சோமுச் செய்ய⋆
செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும்⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (1)

கொந்தலர்ந்த நறுந் துழாய் சாந்தம் தூபம்⋆
தீபம் கொண்டமரர் தொழப் பணம் கொள் பாம்பில்⋆
சந்தணி மென் முலை மலராள் தரணி மங்கை⋆
தாம் இருவர் அடி வருடும் தன்மையானை⋆
வந்தனை செய்திசை ஏழ் ஆறங்கம்⋆ ஐந்து
வளர் வேள்வி நான் மறைகள் மூன்று தீயும்⋆
சிந்தனை செய்திருபொழுதும் ஒன்றும்⋆ செல்வத்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (2)

கொழுந்தலரும் மலர்ச் சோலைக் குழாங்கொள் பொய்கைக்⋆
கோள் முதலை வாள் எயிற்றுக் கொண்டற்கெள்கி⋆
அழுந்திய மா களிற்றினுக்கன்றாழி ஏந்தி⋆
அந்தரமே வரத் தோன்றி அருள் செய்தானை⋆
எழுந்த மலர்க் கரு நீலம் இருந்தில் காட்ட⋆
இரும் புன்னை முத்தரும்பிச் செம் பொன் காட்ட⋆
செழுந்தட நீர்க் கமலம் தீவிகை போல் காட்டும்⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (3)

www.prapatti.com

தாங்கரும் போர் மாலி படப் பறவை ஊர்ந்து⋆
    தராதலத்தோர் குறை முடித்த தன்மையானை⋆
ஆங்கரும்பிக் கண் நீர் சோர்ந்தன்பு கூரும்⋆
    அடியவர்கட்கார் அமுதம் ஆனான் தன்னை⋆
கோங்கரும்பு சுர புன்னை குரவார் சோலைக்⋆
    குழா வரிவண்டிசை பாடும் பாடல் கேட்டு⋆
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த⋆
    திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (4)

கறை வளர் வேல் கரன் முதலாக் கவந்தன் வாலி⋆
    கணை ஒன்றினால் மடிய இலங்கை தந்னுள்⋆
பிறை எயிற்று வாள் அரக்கர் சேனை எல்லாம்⋆
    பெருந் தகையோடுடன் துணித்த பெம்மான் தன்னை⋆
மறை வளரப் புகழ் வளர மாடந்தோறும்⋆
    மண்டபம் ஒண் தொளி அனைத்தும் வாரம் ஓத⋆
சிறை அணைந்த பொழில் அணைந்த தென்றல் வீசும்⋆
    திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (5)

உறி ஆர்ந்த நறு வெண்ணெய் ஒளியால் சென்று⋆ அங்-
    குண்டானைக் கண்டாய்ச்சி உரலோடார்க்க⋆
தறி ஆர்ந்த கருங்களிறே போல நின்று⋆
    தடங்கண்கள் பனி மல்கும் தன்மையானை⋆
வெறி ஆர்ந்த மலர் மகள் நா மங்கையோடு⋆
    வியன் கலை எண் தோளினாள் விளங்கு⋆ செல்வச்
செறியார்ந்த மணி மாடம் திகழ்ந்து தோன்றும்⋆
    திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (6)

இருங்கைம் மா கரி முனிந்து பரியைக் கீறி⋆
    இன விடைகள் ஏழ் அடர்த்து மருதம் சாய்த்து⋆
வரும் சகடம் இற உதைத்து மல்லை அட்டு⋆
    வஞ்சம் செய் கஞ்சனுக்கு நஞ்சானானை⋆
கருங்கமுகு பசும் பாளை வெண் முத்தீன்று⋆
    காயெல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட⋆



www.prapatti.com

செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன் கொள் சோலைத்⋆
    திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (7)

பாரேறு பெரும் பாரம் தீரப்⋆ பண்டு
    பாரதத்துத் தூதியங்கி⋆ பார்த்தன் செல்வத்
தேர் ஏறு சாரதி ஆய் எதிர்ந்தார் சேனை⋆
    செருக்களத்துத் திறல் அழியச் செற்றான் தன்னை⋆
போர் ஏறொன்றுடையானும் அளகைக் கோனும்⋆
    புரந்தரனும் நான்முகனும் பொருந்தும் ஊர் போல்⋆
சீர் ஏறு மறையாளர் நிறைந்த⋆ செல்வத்
    திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (8)

தூவடிவின் பார் மகள் பூ மங்கையோடு⋆
    சுடர் ஆழி சங்கிரு பால் பொலிந்து தோன்ற⋆
காவடிவின் கற்பகமே போல நின்று⋆
    கலந்தவர்கட்கருள் புரியும் கருத்தினானை⋆
சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை⋆
    செம் பொன் செய் திருவுருவம் ஆனான் தன்னை⋆
தீவடிவின் சிவன் அயனே போல்வார் மன்னு⋆
    திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே (9)

‡வாரணம் கொள் இடர் கடிந்த மாலை⋆ நீல
    மரதகத்தை மழை முகிலே போல்வான் தன்னை⋆
சீர் அணங்கு மறையாளர் நிறைந்த⋆ செல்வத்
    திருக்கோவலூர் அதனுள் கண்டேன் என்று⋆
வார் அணங்கு முலை மடவார் மங்கை வேந்தன்⋆
    வாள் கலியன் ஒலி ஐந்தும் ஐந்தும் வல்லார்⋆
காரணங்களால் உலகம் கலந்தங்கேத்தக்⋆
    கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com